**செய்தி வெளியீடு எண் : 770** **நாள் : 09.04.2025**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2–வது கேலோ இந்தியா பாரா விளையாட்டு போட்டிகளில் 74 பதக்கங்கள் வென்ற 62 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 1.12 கோடி உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலை, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 6 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 10.90 லட்சத்திற்கான காசோலைகள் மற்றும் உபகரணங்களை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (9.4.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் புது டில்லியில் நடைபெற்ற 2–வது கேலோ இந்தியா பாரா விளையாட்டு போட்டிகளில் 74 பதக்கங்கள் வென்ற 62 வீரர், வீராங்கனைகளுக்கு 1.12 கோடி ரூபாய்க்கான உயரிய ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கினார்.

மேலும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து இந்தோனேசியாவில் 20.4.2025 முதல் 27.4.2025 வரை நடைபெறவுள்ள ஸ்பீட் ஸ்கேட்டிங் சேலஞ்ச் போட்டியில் பங்குபெறவுள்ள தமிழ்நாட்டை சேர்ந்த செல்வி. எம். தர்ஷனாவிற்கு ரூ. 90,000 க்கான காசோலையும், சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய மலையேற்ற சைக்கிள் (Mountain Bike) சாம்பியன்ஷிப்பில் பங்கேற்கவுள்ள சைக்ளிங் வீரர் ரமணி மற்றும் வீராங்கனை சௌபர்ணிகா ஆகியோருக்கு தலா ரூ. 50,000 க்கான காசோலையும், ரூ. 7.04 லட்சம் மதிப்பிலான நவீன சைக்கிள் மற்றும் தடகள வீரர் திரு. மாரி ஆனந்த் அவர்களுக்கு ரூ. 1.06 லட்சம் மதிப்பிலான போல்வால்ட் உபகரணத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

Khelo India Para Games 2025–ல் 74 பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 62 வீரர்களுக்கு 1 கோடியே 12 இலட்சம் ரூபாய் அளவில், உயரிய ஊக்கத்தொகை வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமையடைகின்றேன்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க சாதனையை படைத்துள்ள உங்களின் திறமையை அங்கீகரிக்க வேண்டும். மேலும் உங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்கிற அடிப்படையில் தான் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே போல, இந்த மேடையில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து ரூ.11 இலட்சம் அளவிலான நிதி உதவியை Speed Skating, Cycling மற்றும் தடகள வீரர்கள் 6 பேருக்கு வழங்க இருக்கின்றோம்.

நம்முடைய அரசை பொறுத்தவரை, மாற்றுத் திறனாளிகளுடைய வெற்றி என்பது பெருமைபடக் கூடிய ஒரு முக்கியமான வெற்றியாகும். தமிழ்நாடு மாற்றுத்திறனாளி வீரர்கள் இன்றைக்கு உலகம் முழுவதும் சாதனைகள் செய்துவருகின்றீர்கள். அதற்கு உதாரணமாகத்தான் இரண்டு வீரர்களை இந்த மேடையில் அமர வைத்திருக்கின்றோம்.

மாற்றுத்திறனாளி தடகள வீரர் தம்பி ரமேஷ் சண்முகம் இங்கு வந்திருக்கிறார். சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகளில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்றவர் தான் தம்பி ரமேஷ் சண்முகம். அதுமட்டுமல்லாமல் சர்வதேச போட்டிகளிலும் மூன்று தங்கப்பதங்களை வென்று நம்முடைய தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தவர்தான் அருமை சகோதரர் ரமேஷ் சண்முகம். தம்பி ரமேஷ் சண்முகத்தின் திறமையை அங்கீகரிக்கும் விதமாக இன்றைக்கு சுமார் 9 லட்சம் ரூபாய் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கு தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை மூலம் உதவிகள் செய்யப்படுகின்றன.

அதுபோல் தங்கை கீர்த்திகா ஜெயச்சந்திரன் இங்கு வந்திருக்கிறார்கள். கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு தங்கப்பதக்கம் மற்றும் ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்று சாதனை படைத்தவர்தான் சகோதரி அவர்கள். அதுமட்டுமல்ல சர்வதேச போட்டிகளில் ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் வென்று இன்று சாதனை படைத்திருக்கிறார். இருவருக்கும் நம்முடைய பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய வெற்றியை நம்முடைய அரசின் வெற்றியாக ஒவ்வொரு முறையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அரசும் கருதுகின்றது. அதனால் தான் நீங்கள் வெற்றி பெற்ற உடனே உங்களை அழைத்து இந்த உயரிய ஊக்கத்தொகையை உடனடியாக நம்முடைய அரசு வழங்குகிறது.

நம்முடைய அரசு அமைந்தது முதல் இந்த நான்கு வருடங்களில் மட்டும் மொத்தம் 258 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு 27 கோடியே 18 இலட்சம் ரூபாய் அளவுக்கு உயரிய ஊக்கத்தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க வழங்கியிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, விளையாட்டு வீரர்களை பார்க்கும் போது, ஒரு தனி எனர்ஜி கிடைக்கும். ஆனால், மாற்றுத்திறனாளி வீரர்கள், உங்களை பார்க்கும் போது, எனர்ஜியோடு சேர்த்து கூடுதலாக நம்பிக்கையும் (Confidence–ம்) கிடைக்கும். வெற்றிக்கு திறமை மட்டுமே போதாது. அந்த திறமையை வெளிப்படுத்துவதற்கான தன்னம்பிக்கை உங்களிடம் இருந்துதான் கிடைகின்றது.

நம்முடைய மாற்றுத் திறனாளி வீரர்கள் மீது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எப்போதுமே தனி அக்கறை உண்டு. மாற்றுத்திறனாளி வீரர்கள் பல வெளி நாடுகளுக்கு செல்கின்றீர்கள். அப்படி

நீங்க செல்லும்போது தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில இருந்து நிதி கொடுக்கின்றோம். நிதியை பெறும்போதே கண்டிப்பாக ஜெயித்து வருவோம் என்று சொல்கின்றீர்கள். நீங்க சொன்ன மாதிரியே ஜெயித்து மெடலுடன் வருகின்றீர்கள்.

அதை பாராட்டும் விதமாக, இந்த உயரிய ஊக்கத்தொகையை வழங்குகின்றோம். இதுவரை, 198 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு 5 கோடியே 29 இலட்சம் ரூபாய் அளவுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து மட்டும் நிதி உதவி வழங்கி இருக்கின்றோம்.

இதுமட்டுமில்ல, SDAT--இன் ELITE, MIMS, CDS, திட்டங்கள் மூலமாகவும் மாற்றுத்திறனாளி வீரர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் மாற்றுத்திறன் வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் தொடர்ந்து நம்முடைய அரசு வழங்கி வருகின்றது. மாற்றுத்திறனாளி வீரர்களின் முன்னேற்றத்துக்கு இந்த பட்ஜெட்ல கூட ஏராளமான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

சென்னை, திருச்சி, மதுரை, சேலம், கடலூர், மற்றும் திருச்சிராப்பள்ளி என 6 இடங்களில் 7 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. விரைவிலேயே அவை திறக்கப்படும்.

அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல், மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 5 மாவட்டங்களிலும் 7 கோடியே 05 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய Para Sports Arenas அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். அந்த பணிகளும் விரைவில் தொடங்கப்படும்.

தொடர்ந்து உங்களுடைய கோரிக்கையினை ஏற்று, சென்னையில் முதன்முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு விடுதி அமைக்கப்படவுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பொறுத்தவரைக்கும் கழக அரசு எப்போதுமே தனி அக்கறை செலுத்தும் என்பது உங்களுக்கு தெரியும்.

தமிழ்நாட்டில் உள்ள அத்தனை அரசுப் பணிகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவீதம் இடஒதுக்கீட்டை வழங்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டில் புதிதாக கட்டப்படும் அரசு கட்டடங்கள் அனைத்திலும் மாற்றுத் திறனாளிகள் சென்று வருவதற்காக தனியாக சாய்வுதளம் (ramp) அமைக்கப்படும் என்று உத்தரவிட்டவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக தனி துறையையும், வாரியத்தையும் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்தத்துறை தற்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகிறது. மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள், சிக்கல்களை தீர்த்து வைப்பதற்காக மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் செயல்பட்டு வருகின்றது.

அதோடு, சென்னை மெரினா, பெசன்ட் நகர் கடற்கரைகளில் கடல் அலைகளில் கோடிக்கணக்கான மக்கள் தங்களுடைய கால்களை நனைத்து வருகின்றார்கள். மாற்றுத் திறனாளிகளுடைய கால்களையும் அந்த கடல் அலைகள் தொட வேண்டும் என்பதற்காக, நீளமான ramp–களை நம்முடைய ஆட்சியில் அமைத்திருக்கிறோம்.

மாற்றுத்திறனாளிகளுக்காக நமது முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்கள். தமிழ்நாட்டின் நகர்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் அனைத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கு நியமன முறையில் பதவி வழங்கப்படும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

சமுதாயத்தில் விளிம்பு நிலையில் இருக்கும் மக்களை கைகொடுத்து தூக்கிவிட வேண்டும் என்பது தான் திராவிட இயக்கம் எங்களுக்கு கற்றுத் தந்த பாடம். அந்த பாடத்தின் அடிப்படையில் தான், திராவிட மாடல் அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

நீங்கள் பெறும் ஒவ்வொரு பதக்கமும், ஒவ்வொரு வெற்றியும், இந்த உலகில் எங்கோ ஒரு மூலையில் வாழும் ஒரு மாற்றுத் திறனாளியின் மனதில் தன்னம்பிக்கையை நிச்சயமாக விதைக்கும். ஆகவே, உங்களிடம் நாங்கள் கேட்டுக் கொள்வது, நீங்கள் தொடர்ந்து பல சாதனைகளை படைக்க வேண்டும். உங்களுடைய சாதனைகளை நீங்களே முறியடிக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளி வீரர்கள் உங்களுடைய வளர்ச்சிக்கு நம்முடைய அரசு அயராது நிச்சயம் உங்களுடன் துணை நிற்கும் என்ற சொல்லி இன்றைக்கு இந்த உயரிய ஊக்கத்தொகையை வாங்க வந்துள்ள, அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் என்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் மேம்பாட்டு தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணை தலைவர்கள் திரு. என். ராமசந்திரன், டாக்டர். அசோக் சிகாமணி, பாரா தடகள வீரர் திரு.ரமேஷ் ஷண்முகம், பாரா தடகள வீராங்கனை செல்வி. கீர்த்திகா ஜெயச்சந்திரன், 2–வது கேலோ இந்தியா பாரா விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu